திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொறியியல் துறையிலே கணிக்கின்ற நேரத்திலே, 1 அடிக்கு, $1\frac{1}{2}$ அடி சரிவு கொடுத்தால் சரியாக இருக்கும் என்று எல்லாம் சொல்கிறார்கள். ஆனால் சரிவு எவ்வளவுக்கு அதிகமாகிறதோ, சதுப்பு நிலமாகவும், களிமண்ணாகவும் இருக்கிற காரணத்தால், களிமண் ஆகி அது கரைகின்ற நேரத்தில் சரிவு அதிகமாகி பொட்டென்று கீழே வாங்கிக் கொள்கிறது. செங்குத்தாக இருந்தால் ஓரளவுக்கு அந்த மண் சரிந்தால் கூட, செங்குத்தாக நிற்பதற்கு ஏதுவாகும். இதைப் பொறியியல் துறையிலே வித்தியாசமாக உணருகிறார்கள். எனவே, பொறியியல் வல்லுநர்கள் இதை ஆராய்ந்து செங்குத்தாக இருப்பது நல்லதா, சரிவாக இருப்பது நல்லதா என்பதை மறு பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதிகாரிகள் மட்டத்தில் இதை மறுபடியும் ஆய்வு செய்து, வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(ஓ) நெல்லை மாவட்டம் வள்ளியூரிலுள்ள கொடுமுடியாறு நீர்த் தேக்கப் பணிகள் நிறுத்தம்.

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ‘‘நெல்லை மாவட்டம் நாங்குநேரி, இராதாபுரம் வட்டம் வள்ளியூரிலுள்ள கொடுமுடி ஆறு நீர்த் தேக்கத் திட்டப் பணிகள் ஒட்டு மொத்தமாக நிறுத்தப்பட்டுள்ளது குறித்த’’ அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :—

அறிக்கை

திருநெல்வேலி - கட்டபொம்மன் மாவட்டம், நாங்குநேரி வட்டம், திருக்குரங்குடி கிராமத்தின் அருகில் ரூ. 1,560 இலட்சம் செலவில் ஒரு நீர்த் தேக்கம் கட்ட அரசு ஆணை எண். 1093 பொதுப் பணித்துறை, நாள் 24-4-1986ல் நிர்வாக ஒப்புதலை வழங்கியது. இத்திட்டத்திற்கு தேவைப்படும் 213.29 ஏக்கர் நன்செய், புன்செய் மற்றும் புறம்போக்கு நிலங்களுடன் 33.15 ஏக்கர் வனத்துறை நிலங்களும் தேவைப்படுகிறது.

2. இத்திட்டத்தில் வனத்துறை நிலங்களை கையகப்படுத்துவதற்கு அனுமதி வழங்குவது குறித்து வனத்துறையில் நடவடிக்கை எடுத்து வருகிற சூழ்நிலையில், மத்திய அரசின் அனுமதியில்லாமல் களக்காடு வனப் பகுதியில் எவ்வித நடவடிக்கையும் த்திட்டத்தின் தொடர்பாக மேற்கொள்ளக் கூடாது என்று

மத்திய அரசிடமிருந்து கடிதம் பெறப்பட்டதால் திட்டப் பணிகளை, தற்காலிகமாக, அதாவது வனத்துறை நிலங்களுக்கு மத்திய அரசின் அனுமதி கிடைக்கும் வரை, நிறுத்தி வைக்க அரசு முடிவு செய்துள்ளது.

3. கொடுமுடியாறு நீர்த்தேக்க திட்டத்திற்கு அனுமதிக்கப்பட்ட ஒரு கோட்டம் மற்றும் நான்கு உபகோட்டங்களின் பணியாளர்களை, மதுரை மாவட்டம், சண்முகா நதி நீர்தேக்கத் திட்டத்திற்கு மாற்றும்படியும் தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்கள் கோரப்பட்டுள்ளார்கள். வனத்துறை நிலங்களுக்கு மத்திய அரசிடமிருந்து ஒப்புதல் பெற விரைவான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மத்திய அரசின் ஒப்புதல் பெற்ற பின்னர், கொடுமுடியாறு திட்டப் பணிகள் மீண்டும் தொடரும்.

இந்த விவர அறிக்கை முன்பு இருந்த நிலையின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டதாகும். இதனைத் தொடர்ந்து இந்தத் திட்டத்தை விரைவில் நிறைவேற்றுவதற்கான வழிமுறைகள் பரிசீலிக்கப்பட்டன. இந்தத் திட்டம் ஏற்கனவே 1975 ஆம் ஆண்டில் அரசால் அனுமதிக்கப்பட்டு, 1976 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்ட திட்டமாகையால், 1980 ஆம் ஆண்டு அமுலுக்கு வந்த வனப் பாதுகாப்புச் சட்டம், இந்தத் திட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கு இல்லை. எனவே, இத்திட்டத்திற்குத் தேவையான வன நிலங்களுக்கு தமிழ்நாடு வனத்துறையே அனுமதி அளிக்கலாம் என்ற அடிப்படையில் வனத் துறையின் அனுமதி கோரப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்தவுடன் திட்டப் பணிகள் முழு வேகத்துடன் செயல்படுத்தப்படும்.

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டமானது வள்ளியூர், ராதாபுரம் பகுதிகளைச் சேர்ந்த மக்களுடைய 25 ஆண்டுக் காலப் பிரச்சினையாக இருக்கிறது. அதன் மூலமாக 41 குளங்களும், கிட்டத்தட்ட 3500 வாட்டர் ரேட் புஞ்சை நிலங்களும் இதிலே பயன் பெறுகின்றன. இதிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, 1976-லே மாண்புமிகு முதல்வர் அவர்களாலே அடிக்கல் நாட்டப்பட்டு, பிறகு இந்தப் பணிகளுக்கெல்லாம் கிட்டத்தட்ட அதிகமான தொகைகள் எல்லாம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதற்காக அஸ்திவாரம் கூட 40 அடி அகலம், 20 அடி ஆழத்திலே தோண்டப்பட்டு, முழுமையாக அதிகாரிகள் எல்லாம் நியமிக்கப்பட்டு, அவர்களுக்கு புதிய குடியிருப்புகள் கூடக் கட்டியிருக்கிறார்கள். இவ்வளவு தூரம் இருந்தும், அங்கு இயந்திரங்கள் எல்லாம் வரவழைக்கப்பட்டும் அவை இப்போது துருப்பிடிக்கின்ற நிலையிலே இருக்கின்றன. எனவே, மத்திய அரசிடத்திலே துரிதமாக நீங்கள் இந்தக் கோரிக்கையை எடுத்துச் சொல்லி, வன இலாகாவின் மூலமாகக் கொடுக்கப்பட்டிருக்கிற அந்த இடர்ப்பாட்டை நீக்கி, இந்தத் திட்டத்தை விரைவில் அமல் நடத்திக் கொடுக்க முடியுமா

என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை வேகமாக எடுக்க வேண்டும் என்று சொல்லித்தான் 1980 ஆம் ஆண்டு வனப் பாதுகாப்புச் சட்டம் இந்தத் திட்டத்தைக் கட்டுப் படுத்தாது என்று சொல்லி, நான் சொல்கிற நேரத்தில், 1976-லே வேலை ஆரம்பித்ததாக உங்கள் மத்தியிலே தஸ்தாவேஜு இருந் தால் கொடுங்கள் என்று சொன்னார்கள். அதன்படி 13.83 ஏக்கர் வன நிலங்களை இப்போது நாங்கள் எடுத்திருக்கிறோம். அதற்கு 14 ஆயிரம் ரூபாயை அரசாங்கத்திற்கு, வனத் துறைக்குக் கூட பணமாகக் கட்டியிருக்கிறோம். ஏறத்தாழ ரூ. 32 இலட் சம் செலவிடப்பட்டுள்ளது என்கிற கணக்குகளையெல்லாம் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வனத்துறை அதிகாரிகளிடம் காட்டி யிருக்கிறார்கள். ஆகவே மிக வேகமாக உத்திரவு கிடைக்கும் என்று நம்பலாம்.

6. அரசினர் சட்டமுன் வடிவுகள்

(அ) இயக்கூர்திகள் மோட்டார் வாகனங்கள் வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (மோட்டார் வாகனங்கள்) வரி விதிப்பு (திருத்த) சட்ட முன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி: இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஆ) வேளாண் விளைபொருள் சந்தைக (திருத்த) சட்ட முன்வடிவு 1987.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளை பொருள் சந்தைகள் (திருத்த) சட்ட முன்வடிவு **(சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 10/1987) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

**1987 ஏப்ரல் 24 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.